# வெற்றிடங்கள்

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

**இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)**

**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**

**உதவி பணிப்பாளர் பதவி - முகாமைத்துவ பிரிவு (MM 1-1)**

## உதவி பணிப்பாளர் பதவி (நிர்வாகம்) – 1 பதவி

**தகைமைகள்**

**வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொது பட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றாக முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தகம், மனித வள முகாமைத்துவம் அல்லது வர்த்தக நிர்வாகத்தில் இளமாணி பட்டம்.

**அத்துடன்**

பதவியுடன் தொடர்புடைய ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## உதவி பணிப்பாளர் பதவி (உள்ளக கணக்காய்வு) – 1 பதவி

**தகைமைகள்**

**வெளிவாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொது பட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றாக கணக்கியல்/ வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.
   **அத்துடன்**
   பதவியுடன் தொடர்புடைய ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய துறையில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான **அனுபவம்.**

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## உதவி பணிப்பாளர் பதவி (தூரநிலை மற்றும் சேவை ஊக்குவிப்பு) – 2 பதவி

**தகைமைகள்**

**வெளிவாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொது பட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றாக ஒரு பாடமாக சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துடன் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.
   **அத்துடன்**
   பதவிக்கு தொடர்புடைய ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய துறையில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## உதவி பணிப்பாளர் பதவி (தகவல் தொழில்நுட்பம்) – 1 பதவி

**தகைமைகள்**

**வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொது பட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றாக தகவல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

பதவிக்கு தொடர்புடைய ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**தேர்வு முறை**

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை

இந்த பரீட்சையானது கீழ் தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இரு பாகங்களைக் கொண்ட ஒரு வினாத்தாளை (3 மணி நேரம்) உடையதாகும்.

- ஆங்கில மொழி தேர்ச்சி
- உளச்சார்புச் சோதனை

**மற்றது**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** இ.ரூபா 53,175.00 – 16 x 1,375.00 - இ.ரூபா 75,175.00

**வயது :** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**ஏனைய நன்மைகள்**

1. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
2. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
3. ஒரு வரம்புக்கு உட்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
4. பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
5. தொடர்பாடல் கொடுப்பனவு
6. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் சந்தர்ப்பம்

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏனைய தொடர்புடைய விடயங்களை குறிப்பிட்ட விண்ணப்பத்தை சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து 2025.02.17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்பல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்

**இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம்**

தொ.: 011 2671567 - 72